விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் தற்போதுள்ள CCTV கெமரா கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய CCTV கெமராக்களைப் பொருத்துதல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் தற்போதுள்ள CCTV கெமரா கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய CCTV கெமராக்களைப் பொருத்துதல் ஆகிய பணிகளுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் கோருகின்றார்.

பெறுகை இல	பெறுகையின் பெயர்	விலைமனு பிணைமுறி	மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம்
T/26/2026	கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் தற்போதுள்ள CCTV கெமரா கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய CCTV கெமராக்களைப் பொருத்துதல்	20,000	3,500

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் (NCB) கீழ் விலைமனுக்கோரல் முன்னெடுக்கப்படும்.
2. தகைமையுடைய ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை, 2026.11.13 முதல் 2026.11.27 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மொரட்டுவ, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் விநியோகப் பிரிவின் உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், 2026.11.13 முதல் 2026.11.27 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். விலைமனு ஆவணங்களை கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் இணையதளமான www.industry.gov.lk மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் இணையதளமான www.idb.gov.lk ஆகியவற்றிலும் பார்வையிடலாம் (பார்வையிடுவதற்கு மாத்திரம்). எனினும், விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு, மேற்குறிப்பிட்ட அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணத்தையே விலைமனுதாரர்கள் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமது ஏழுத்துமூல விண்ணப்பத்தை 2026.11.13 முதல் 2026.11.27 வரை வேலை நாட்களில் காலை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 3,500/- பணமாகச் செலுத்தி, மொரட்டுவ, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கட்டுபெத்த, மொரட்டுவ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது 2026.11.30 அன்று முற்பகல் 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், மொரட்டுவ, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரிடம் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரம் முடிவடைந்தவுடன், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம், இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவவில் அமைந்துள்ள சபையின் கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும். இதன்போது கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். விலைமனு அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் விலைமனுதாரரின் பெயர் மற்றும் விலைமனு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் வரை செல்லுபடியாகும் வகையில் இருத்தல் வேண்டும். அத்துடன், ஒவ்வொரு விலைமனுவுடனும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணைமுறி (2027.03.26 வரை செல்லுபடியாகும் வகையில்) இணைக்கப்பட்டிருக்க வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணைமுறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2026.11.20 அன்று முற்பகல் 10.00 மணிக்கு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவவில் அமைந்துள்ள சபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.
7. மேலதிக விபரங்களுக்கு, தொடர்புகொள்ளவும்:

உதவிப் பணிப்பாளர் (விநியோகம்)
தொலைபேசி: 011-2607004
மின்னஞ்சல்: supplyidb@gmail.com

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (சிறிய),
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
இல. 615, காலி வீதி,
கட்டுபெத்த, மொரட்டுவ.
தொலைபேசி/தொலைநகல்: 011-2607004